தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 10.] MADRAS:—SUNDAY MARCH, 6, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

வேகத்துவம்.	சந்தியாவந்தனம்.
பகவத்கீதை விந்தை.	கடிதங்கள்.
இந்துசமயசாரவிளக்கம்.	வர்த்தமானசங்கிரகம்.

வேகத்துவம்

(33-வது பக்கத் தொடர்ச்சி.)

இடம் என்பது இரண்டு குறிகளுக்கிடையேயுள்ள தூரத்தின் சம்பந்தமாம். அதை யொரு பதார்த்தமெனக் கொள்ளுதல் தவறு. வேகத்துவத்தை நாமறிதல் இடபேதத்தாலாதலாலும், வேகத்துவத்தினது தன்மையை யளவிடவேண்டியிருப்பின் இடபேதத்தை யளவிடுதல்வேண்டுமாதலாலும், ஓர் இட அளவை யிருக்கவேண்டியது ஆவசியகம். வேகத்துவ நூலில் ஒரு அடியையே இட அளவையாககொண்டு இருக்கின்றது.

காலம் என்பதும், ஒரு வஸ்துவன்று. வேகத்துவத்தை கால சம்பந்தத்துடன்நோக்குங்கால் வேகமென்பது இன்னதென நன்கு விளங்கும். காலத்திற்கும் அளவை வேண்டியிருப்பதால் ஒரு விநாடியைக் கால அளவையாகக்கொள்ளுதல் வேகத்துவ சாத்திரமரபு.

வேகம் என்பது ஒரு வஸ்துவின் இடமாறுந்திவரமே. வேகமென்பதில் காலமும் இடமும் அடங்கியிருக்கின்றது. காலமும், இடமும், அளவிட்டிருத்தல்போல, வேகத்தையும் அளவிட்டிருக்கிறது. ஒரு வஸ்துவின் வேகம் - ௫ - என்றால், அதற்குப்பொருள், சமவேகத்துவத்தையுடைய அப்பொருள் ஒரு விநாடியில் - ௫ - அடி தூரம் செல்லுமென்பதே:

ஆக்கிருஷணவேகம் என்பது எதிர்ப்பட்ட பதார்த்தங்களை, வேகத்தோடு செல்லும் வஸ்துக்கள் மோதும் வலிமை. ஆக்கிருஷண வேகத்தையும் அளவிட்டுரைத்தல் கூடும். வேகத்துவத்தையுடைய பதார்த்தத்தினது எடையையும் வேகத்தையும் பெருக்கினால் அதுவே ஆக்கிருஷணவேகம் எனப்படும். (உதாரணம்) ௫ - பவுன் எடையுள்ள ஒரு கல் ஒரு விநாடியில் ௨௦ - அடி தூரம் சென்றால் - ௫ :: ௨௦ - அல்லது - ௧௦௦ - தான் அதன் ஆக்கிருஷண வேகம்.

பதார்த்தம் (அல்லது வஸ்து) என்பது அகல, நிகள, பருமனையும் உடையதாயும் புலன்களுக்கு விஷயப்பட்டதாயும் உள்ளதே.

சத்துவம் என்பது வேகத்துவத்தை யுண்டாக்கும் காரணம்.

முக்கியமான பதங்களுக்கு நாம் பொருள்கூறிவிட்டோமாதலால் இனி வேகத்துவப்பிரகிர்தி நியாயப்பிரமாணங்களையும் வேகத்துவத்தின் தன்மையையும் இனி தெளிவுறக்கூறுவாம்.

குருத்துவவேகமென்பது எதிர்ப்பட்ட பதார்த்தங்களை வேகத்தோடு செல்லும் வஸ்துக்கள் மோதும் வலிமை என்றும். இவ்வேகத்தினைக் கணக்கிடுதல் கூடுமென்றும் கூறியுள்ளோம். இவ்வேகத்தால் நிகழும் தொழிலைப்பற்றிய சில விஷயங்களை ஈண்டு யாவருக்கும் தெளிவாய் விளங்கக்கூறுவோம். இவ்வேகத்தை யளவிடுதல் எங்ஙனமெனின் வேகத்தோடு செல்லும் பதார்த்தத்தின் எடையையும் அதனது வேகத்தையும் பெருக்கலேயாம். இக்கணக்கைககொண்டு எதிர்ப்பட்ட வஸ்துக்களின்மேல் வேகத்தோடு செல்லும் வஸ்துக்கள் விழுவதனால் உண்டாகும் கெடுதியை யளவிடுதல் கூடும்.

இரண்டு பலம் எடையுள்ள ஒரு சிறிய கல்லையும் - 20 - பலமுள்ள மற்றோர் கல்லையும் ஒரு சுவரிற்குச் சரியாக நாம் எறிவோமேயானால், இவ்விரண்டு கற்களில் சுவரை காயப்படுத்தும் வலிமை எதற்கு அதிகமாயிருக்கும்? இவ்வினாவிற்கு வேகத்துவப் பிரமாணங்களை யுணராதார் - 20 - பலமுள்ள கல்லுக்கே அதிக காயப்படுத்துந் தன்மை யிருக்கின்றதென வுரைப்பர். அவ்வாறுரைத்தல் தவறு. ஏனெனின், எதிர்ப்பட்ட பதார்த்தமாகிய சுவரை வேகத்துடன் செல்லும் வஸ்துக்களாகிய இவ்விரண்டு கற்களும், மோதும் வலிமையை அளவிடுதற்கு அவைகளினது எடையையும் வே[illegible]யும் பெருக்கவேண்டுமாதலால், அவைகளினது எடையாலே, [illegible]திர மறிந்துகொண்டு, அதிக எடையுள்ளது சுவரை ய[illegible] காயப்படுத்துமென கொள்ளுதல் தவறு. சிறிய வஸ்துக்கள் அதிக வேகத்தோடும் போவது கூடுமாதலாலும், பெரிய வஸ்துக்கள் சொற்பவேகத்தோடு போவது கூடுமாதலாலும், பெரிய வஸ்துக்களே எதிர்ப்பட்ட வஸ்துக்களை யதிக காயப்படுத்துமென கூறுதல் சரியன்று. இதை உதாரண வாயிலாக எடுத்துக்காட்டுவாம். 2 - பலமுள்ள கல் ஒரு விநாடிக்கு - 20 - அடி வீதம் செல்லும் விசையாய் ஒரு சுவரின்மேல் யெறியப்பட்டு, 20 - பலமுள்ள மற்றோர் கல் ஒரு விநாடிக்கு - 1 - அடி வீதம் செல்லும் விசையினது அதே சுவரின்மேல் யெறியப்பட்டால் இவற்றில் எது அதிகமாய் சுவரை காயப்படுத்தும்? (அல்லது) எது அதிக வலுவாய் சுவரைமோதும்? இவ்வினாவிற்கு விடை—

சிறியகல்.

இக்கல்லுக்கு எடை - 2 பலம்

,, வேகம் - 20 அடி

ஆகையால் இக்கல்லின் குருத்துவவேகம் - 2 : : 20=40.

பெரியகல்.

இக்கல்லுக்கு எடை - 20 பலம்

,, வேகம் - 1 அடி

ஆகையால் இக்கல்லின் குருத்துவவேகம் - 20 : : 1=20.

இதனால் சிறிய கல்லுக்கு சுவரின்மேல் மோதும் வலுமை அதிகமானதைக் காண்க.

இ. மு.

பகவத்கீதையிலுள்ள விந்தை.

பரமாத்மா எங்கும் நிறைந்திருக்கிறானென்று சொல்வதே போதுமே; அவன் ஒவ்வொருவருடைய ரோதஸிலுமிருந்து கொண்டு ஜநோற்பத்திசெய்து வருகிறானென்று பகவத்கீதை 12-ம் அத்தியாயத்திலும், பிருஹதாரண்ய உபநிஷத் 5-ம் அத்தியாயம் 7-வது பிராம்ஹணத்திலும் சொல்லியிருக்கிறது. அப்படியாயின், எல்லாச் சீவராசிகளிலுந்தான் அவ்வாறிருத்தல் வேண்டும். பரமாத்மா ஒவ்வொரு கர்ப்பத்திலுந்தங்கியிருந்து உருப்படுத்திக்கொண்டுவருகிறானோ அல்லது வெளிப்பட்டு விடுகிறானோதெரியவில்லை. சந்ததி யுண்டாகாதவர்களுடைய ரோதஸில் பரமாத்மா இல்லைபோலும், சிசுக்கள் உருப்படும்போது சலைச்குறை முண்டமாகவும் கூன் குருடு முடமாகவும் மணைக்கட்டையாகவும் விகாரரூபமடைவதற்குக் காரணம் கருமமென்பார்கள். கருமமேற்கொண்டு அதன்வசப்பட்ட பரமாத்மா உருப்படுத்திவர, அது கெடுத்துக்கொண்டுவருவதால், அவன் வீணுக்கு உருப்படுத்துவது அவனுடைய புத்திவிகாரமாகும்! இதிலுள்ள ஆபாசங்களை வாசிப்பவர்களே தெரிந்துகொள்ளுவார்களாகையால், சூசனையாகமாத்திரம் காட்டினோம்.

இந்துசமயசாரவிளக்கம்.

சதுர்வேதங்களுக்கடுத்தவிவரங்கள்.

(35-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்போது இந்துமதஸ்தர்கள் பிரதானமாய் ஆராதிக்கிற விஷ்ணு, சிவன், சுப்பிரமணியன், பிள்ளையார் முதலானவர்களுடைய ஆராதனையைக்குறித்து வேதங்களிலே யாதொன்றுங்காணோம். அக்காலத்தில் அவர்களின்னம் முக்கியமாகவில்லையென்பது நிச்சயமாமே. அவர்களில் விஷ்ணு, சிவன் என்பவர்களுடைய பேர் வேதங்களில் கிடைத்தால் மிகவும் அருமையாம். அவர்களுடைய ஆராதனையைக்குறித்து விசேஷம் ஒன்று

மில்லை. ஆதலால் அவர்களுடைய ஆராதனை வணகம் அக்காலத்தில் இன்னம்பிரபலியமாகவில்லை. அவர்களுடைய புத்திரர்களின்பேர் வேதங்களிலேகாணோம்.

வேதங்கள் மிகவும் விரிவாயிருந்தாலும் அதுகளில் தெய்வத்தைக்குறித்துத் தெளிவான போதனை யொன்றுமில்லை: அதுகளிலடங்கிய பாட்டுகளை யுண்டாக்கின புலவர்கள் அக்காலத்தும் பற்பலதேவர்களுடைய ஸ்துதிகளைத் தங்கள் சர்வ சாமர்த்தியத்தோடே மிதமிஞ்சினவிதமாய்ப் பாராட்டினதினுல் அநேகரை ஏறக்குறைய ஒத்தபடி புகழ்ந்து உயர்த்தினார்கள். ஆகையால் அந்தப் பாட்டுகளை ஆராய்ந்து வாசிக்கிறவர்களுக்கும் பல சமுசயமும் உண்டாகின்றது. அதுகளேதெனில் அ[illegible]டி அந்தப் புலவர்களால் கொண்டாடப்பட்டவர்[illegible]ரும் வெவ்வேறே தேவர்களோ பல நாமமுள[illegible] தேவர்கள் மாத்திரமோ அல்லது புலமைவெறியி[illegible] அந்தப் புலவர்கள் தங்கள் மதஸ்தர் சில தேவர்களுக்குச் சாத்தின விசேஷதத்துவ வல்லமையிலக்ஷணங்களை ஒவ்வொரு தேவனுக்குச் சாத்தினார்களோ என்றிது முதலான சமுசயங்களுண்டாகின்றது.

மேலும் இருக்குவேதத்திலே விசேஷமாய்ச் சோமத்துக்கு ஸ்துதியான அநேகம் பாட்டுகளுண்டு. அதுகளைச் சரியாய்க் கவனியாமல் அநேகர் அந்தப் பாட்டுகளெல்லாஞ் சோமனென்னப்படுகிற சந்திரனுக்குப் புகழாமென்று நினைத்திருந்தார்கள். ஆனால் சாஸதிரிகள் அதுகளைச் சரியாய் ஆராய்ந்து பரிசோதிக்கிறபோது அதுகளில் மிகுந்த பாட்டுகள் சோமத்துச்சாரமாகிய மதுவுக்குப் புகழ்ச்சியாமென்று திஷ்டாந்தமாய்க் கண்டுபிடித்தார்கள். அந்தப் பாட்டுகளை யுண்டாக்கின புலவர்கள் தேவர்களைப் பாராட்டுகிறாப்போலே இந்த மதுவையுந் தங்கள் சர்வ திறமையோடே பாராட்டுகிறார்கள், அதுக்குச் சில விண்ணப்பங்களையுஞ் செய்கிறார்கள். தேவர்களை மன்றாடுகிறாப்போலே அதையுமன்றாடிச் சில வரங்களைக்கேட்கிறார்கள். சோமச்சாரத்தைக் குடிக்கிற பிராமணருக்கு அது மிகவும் பிரியமாயிருப்பதினுல் அதை அவ்வளவாகப் பாராட்டியிருப்பார்களென்னத்தகும். ஆயினுஞ் சோமச்சாரத்தை ஓர் தெய்வத்தைப்போலே பாராட்டி அதை வரங்கேட்கிறது நியாயமோ?

வேதங்களில் அடங்கிய பாட்டுகளை ஆராய்ந்து பார்த்தால் அதுகளில புலமைத்திறமையும் அதின் மருளும் மிதமிஞ்சின புகழ்ச்சிகளும் பிரதானமாய் விளங்குகிறதொழிய வேதத்துக்கு ஏற்ற ஞானமும் புத்தியும் பத்தியும் விளங்குகிறதில்லை. அக்கினி, வாயு, மருத்துகள், அச்சுவினிகள் முதலானவர்களுக்குப் புகழ்ச்சியாக மிகுந்த பாட்டுகளுண்டு. அதுகளை நன்றாய் ஆராய்ந்து பார்க்கிறபோது விளங்குகிறதாவது: ஓர் பள்ளிக்கூடத்திலே படிக்கிற மாணக்கர்களுக்கு வாத்தியார் ஓர் விஷயத்தின்பேரில் பாட்டு செய்யச்சொன்னுல் அவர்கள் செய்யும் பாட்டுகள் எத்தன்மையாய் வேற்றுமையும் ஒற்றுமையுமாமோ வேதங்களின் பாட்டுகள் அத்தன்மையாய் வேற்றுமையும் ஒற்றுமையுமாமே. சிலதுகள் புலமை மருளில் மிதமிஞ்சின மங்கலப்புகழ்ச்சிகளாமே. சிலதுகள் மிதந்தப்பின பாராட்டாகையில் புத்திக்கொவ்வாத அனர்த்தமாம்.

வேதங்களின் பாட்டுகளையும் அதுகளின் பிராமணங்களையும் உபநிஷதங்களையும எழுதினவர்கள் பலபேராகையில் அவர்களுடைய போதனை எப்போதுஞ் சரியாய் ஒத்துவராது. பூர்வந்துவக்கிப் பிராமணர்முதலிய இந்து மதஸ்தர் அதுகளுக்குரிய அர்த்தத்தின பேரில் ஒத்துவராமல் மிகவும் விபரீதப்பட்டார்கள் முந்திச் சொன்னபடியே வேதங்களில் பூதியங்கள் முதலிய பல வஸ்துக்களுக்கு வணக்க தோத்திர ஆராதனை விண்ணப்பப்பாட்டுகள் அடங்கியிருக்கின்றது. ஆதலால் அதுகள் வெளிப்பட்ட காலத்தில் இந்துமதஸ்தர் பல வஸ்துககளுக்கு ஆராதனை செய்துகொண்டிருந்தார்கள். பின்னுஞ்சிலர் வேதங்களின் அர்த்தத்தைத் தங்களிஷ்டத்துக்கு நிதானம்பண்ண வருந்தி அதுகளின் பாட்டுகள் பல்பேருக்கு நியமிக்கப்பட்டிருந்தாலும் அதுகளெல்லாம் பூதியங்களுக்குச் சேரத்தக்கதென்றும அந்தப் பல நாமங்கள் அதுகளைக் குறிக்கிறதென்றும் அர்த்தம் பண்ணினார்கள். மற்றச் சிலர் பரமாத்துமா சகல வஸ்துக்களிலும் பரம்பியிருக்கிறதினுற் சகலமுந் தெய்வமாயிருக்கிறதென்று அலலது அந்தந்த வஸ்துக்களுந் தெய்வத்தின் பங்காயிருக்கிறதென்று சொல்லி வெவ்வேறு வஸ்துக்களுக்குப் புகழ்ச்சியாகச் செய்யப்பட்ட பாட்டுகள் பரமாத்துமாவைச் சேர்ந்ததென்று போதித்தார்கள். மற்றநேகர் வேதங்களில் பாராட்டப்பட்டவர்களை வணங்கினார்களேயல்லாமல் நாள்வட்டத்தில் வேறநேக தேவர்களையுமேற்படுத்தி மேன்மேலுந் தவறிப்போனார்கள். இப்படி அநேகர் வேதங்களுக்குப் பற்பல அர்த்தஞ் சாத்தினதினுல் வியாசன் காலந் துவக்கி இதுவரைக்கும் பிராமணர் பற்பல சமயங்களாய்ப் பிரிவினைப்பட்டு ஒவ்வாத பல போதகங்களையும் விபரீதமான சாஸ்திரங்களையும் ஏற்படுத்தினார்கள். இவ்வண்ணமே பூர்வந்துவக்கிப் பிராமணர்கள் முதலாய் வேதங்களுக்குரிய அர்த்தத்தின்பேரில் ஒற்றுமைபாயிராமல் பல விகற்பப்பட்டிருக்கிறார்கள்.

மீளவும் பல தேவர்களின் ஆராதனை மெய்ஞ்ஞானத்துக்கொவ்வாதென்று சிலர் கண்டுபிடித்து மேற்சொலியபடி வேதங்களில் கொண்டாடப்பட்டவர்கள் பல நாமங்களைக்கொண்ட சில தேவர்களாம், அல்லது ஒரே தெய்வமாத்திரமாயிருக்கிறதென்று நம்புவிக்கப் பிரயாசப்பட்டார்கள். ஆனால் இருக்குவேதத்திலடங்கிய ஒரு வாக்கியம் [காண்டம் 1, அத்தியாயம் 2, அநுவாகம் 6, சூக்தம் IV. 13.] திஷ்டாந்தமாய் அவர்களைமறுக்கின்றது. உள்ளபடி அதின்மொழிபெயர்ப்பாவது; பெரிய தேவர்களுக்குவணக்கமுஞ் சின்னதேவர்களுக்கு வணக்கமும் புதியவர்களுக்கு வணக்கமும் பழையவர்களுக்கு வணக்கமுமுண்டாக; எங்களாற்கூடியமட்டுஞ் சகல தேவர்களையும் ஆராதிக்கிறோம். பூர்வ தேவர்களுடைய ஸ்துதிகளை மறந்துவிடாதிருக்கக் கடவேமாக வென்பதேயாம். இதை இந்துமதஸ்தர் சரியாய் அநுசரிக்காமல் தங்கள் பூர்வ தேவர்களில் அநேகருடைய பேரை முதலாய் மறந்துவிட்டு வேறே தேவர்களை ஏற்படுத்தினார்கள்.

மீளவும் இந்த வாக்கியத்தில் விளங்குகிறபடியே சதுர்வேதங்களில் பெரியவர்களுஞ் சின்னவர்களும் புதியவர்களும் பழையவர்களுமாகிய பற்பல தேவர்கள் புகழ்ந்து ஆராதிக்கப்படுகிறதென்பது நிச்சயமாமே. அப்படி அதுகள் அநேக பொய்த்தேவர்களின் ஆராதனையைப் படிப்பிக்கிறதினுல் அஞ்ஞான அந்தகாரத்துக்கு அஸ்திவாரமாயிற்று. அல்லாமலும் அக்காலத்தில் புதுத்தேவர்களிருந்ததென்று அந்த வாக்கியங் காட்டுகிறதினுல பழைய வேதமுறை மாற்றப்பட்டதென்று திஷ்டாந்தமாமே. வேதமாறவே பொய்யாய்ப்போயிற்றென்பது உறுதியாமே.

சந்தியாவந்தனம்.

(35-வது பக்கத்தொடர்ச்சி.)

ஹிரண்ய வர்ணஹ என்ற மற்றொரு மார்ஜின மந்திரம்.

౧. హిరణ్యవర్ణాశ్శుచయః, పావకాయాసుజాతః కశ్యపోయాస్విన్ద్రః, అగ్నింయాగర్భందధిరే, విరూపాస్తాన ఆపశ్శగ్ంస్యోనాభవన్తు.

౨. యాసాగ్ం రాజావరుణోయాతిమధ్యేసత్యానృతే అవపశ్యఞ్జనానాం మధుశ్చ్యుతశ్శుచయోయాఃపావకాస్తాన ఆపశ్శగ్ంస్యోనాభవన్తు.

3. యాసాందేవాది విక్రృణ్వన్తిభక్షం, యాఅన్తరిక్షేబహుధాభవన్తి, యాఃపృథివీం పయసోన్దన్తి, శుక్రాస్తాన ఆపశ్శగ్ స్యోనాభవన్తు.

౪. శివేనమాచక్షుషా పశ్యతాపశ్శివయాతనువో పస్పృశతత్వచమ్మే, సర్వాగ్ అగ్నీగ్ రప్సుషదో హువేవో మయివర్చోబలమోజోనిధత్త, ద్రుపదాదివముఞ్చతు, ద్రుపదాదివేన్ముముచానః, స్విన్నస్నాత్వీమలాదివ, పూతంపవిత్రేణేవాజ్యం, ఆపశ్శున్ధన్తుమైనసః.

1. ஹிரண்ய வர்ணு ஸ்சுசடஹ, பாவகாயா ஸுஜாதஹ கஸ்யபோ யாஸ்விந்த்ரஹ, அக்னிம்யா சர்ப்பம்ததிரே, விரு பாஸ்தான ஆபஸ்ஸக் ஸ்யோனுபவந்து.

2. யாஸாக்ராஜா வருணேயாதிமக்யே சத்தியாந்ருதே அவ பஸ்யந்ஜனுனும் மதுஸ்ச்யுத ஸ்ஸுசயோயாஃ பாவகாஸ்தான ஆபஸ்ஸக் ஸ்யோனுபவந்து.

3. யா ஸாம்தேவாதி விக்ருண்வந்திபக்ஷம், யா அந்தரிக்ஷே பஹுதாபவந்தி யாஃப்ருதிவீம் பயஸோந்தந்தி, ஸுக்ராஸ்தா ன ஆபஸ்ஸக் ஸ்யோனுபவந்து.

4. சிவேனமா சட்சுஷா பஸ்யதாபஸ் சிவயா தனுவோபஸ் ப்ருச தத்வசம்மே, ஸர்வாக் அக்னீக் ரப்ஸுஷதோ ஹுவே வோமயி வர்ச்சோ பலமோஜோ நிதத்த, த்ருபதாதிவமுஞ்சது, த்ருபதாதிவேன்முமுசானஹ, ஸ்வின்னஸ்னாத்வீ மலாதிவ, பூதம் பவித்ரேணேவாஜ்யம், ஆபஸ்சுந்தந்து மய்னஸஹ.

கருத்து.—எவை இயற்கையில் சுத்தமாயும், அன்னியனை சுத்திகரிக்கும்படி யானவையாயும், வடவாக்கினியை தம் கர்ப்பத்தில் வைத்துக்கொண்டிருப்பனவாயும், இருப்பன வெவையோ அந் நீர்கள் எங்கள் துக்கத்தை விலக்கி சுகத்தைத் தரக்கடவது. ஓ ஜலங்களே! குளிர்ந்த உங்கள் கண்களால் என்னை நோக்கிப் பாருங்கள்.

ஹக்யா என்னும் மத்தியான அர்க்கியப் பிரதான மந்திரம்.

హగ్ంసశ్శుచిషద్వసురన్తరిక్షసద్ధోతా వేదిషదతిథిర్దురోణసత్, నృషద్వరసదృతసద్వ్యోమస దబ్జాగోజాఋతజాఅద్రిజాఋతంబృహత్.

ஹக் ஸஸ்ஸுசி ஷத்வஸுரந்தரிக்ஷ ஸத்தோதாவேதிஷ ததிதிர் துரோணஸத், ன்ருஷத்வரஸத்ருத ஸத்வ்யோம ஸதப்ஜா கோஜாருதஜா அத்ரிஜாருதம்ப்ருஹத்.

கருத்து.—பூமிக்கு அதிபதியாய் புண்ணிய ஸ்தலங்களில் இருப்பவனும், சூரியனுய் ஆகாயத்தில் இருப்பவனும், அக்கினி ரூபத்துடன் தேவர்களின் யாகத்தில் ஒரு தேவதையாக யாகமேடையில் இருப்பவனும், அகிலாண்டமென்னும் வீட்டில் இருப்பவனும், அக்கினிரூபத்துடன் மாந்தரிடத்தில இருப்பவனும், ஞான சொரூபத்துடன் சிரேஷ்டமான பண்டிதரிடத்தில் இருப்பவனும், யாகத்தில் இருப்பவனும், ஜலத்திலிருப்பவனும், பசுக்களிடத்திலிருப்பவனும், வேதத்தில் முக்கியமாகச் சொல்லப்பட்டு இருப்பவனும், பருவதத்தில் இருப்பவனுமாகிய சூரிய பகவான் சத்தியம்.

அர்க்கிய பிரதானம்.

స్మృత్యాచమనంకృత్వా ప్రాణానాయమ్య పూర్వోక్త...ప్రీత్యర్థం...సన్ధ్యాం గార్ఘ్యప్రధానాంకరిష్యేకాలాతీతవిశుద్ధ్యర్థం చతుర్థార్ఘ్యప్రదానంకరిష్యే. ఓం భూః...చోదయాత్. అసవాదిత్యోబ్రహ్మ &c.

ஸ்மிருத்யாசமனம்க்ருத்வா ப்ராணுயம்ய பூர்வோக்த... ப்ரீத்யர்த்தம்......சந்த்யாம்கார்க்ய ப்ரதானுனிகரிஷ்யே. காலாதீத விசுத்தியர்த்தம் சதுர்த்தார்க்ய ப்ரதானம் கரிஷ்யே. ஓம் பூஹு......சோதயாத். அஸவாதித்யோப்ரம்ம.

மூன்று சந்திகாலங்களிலும் ஓம பூஹு...பிரஜோதயாத் என்று மூன்றுதடவை சொல்லி மூன்று அர்க்கிய பிரதானங்கள் செய்யவேண்டியது. காலந்தப்பி செய்தால் பிராயச்சித்தத்திற்காக மறுபடியும் ஒரு அர்க்கிய பிரதானம் செய்யவேண்டியது. இப்படி மந்திரித்து கையிலெடுத்து விட்ட ஜலத்தினுல் ராக்ஷதர்கள் மடிந்துவிடுவார்சள். அவர்களை அவ்வாறு கொன்ற அத்தோஷங்களைப் போக்கடிக்க—

ఉద్యన్తమస్తంయన్తమాదిత్యమభిధ్యాయన్ కుర్వన్ బ్రాహ్మణోవిద్వాన్ త్సకలంభద్రమశ్నుతేసావాదిత్యో బ్రహ్మేతిబ్రహ్మైవసన్ బ్రహ్మాప్యేతియఏవంవేద.

(உத்யந்தமஸ்தம் யனசமாதித்திய மபித்யாயன் குர்வன்ப்ராம்மணே வித்வான் த்ஸகலம்பத்ர மஸ்னுதே ஸாவாதித்யோ பிரம்மேதி பிரம்மயிவசன் பிரம்மாப்யேதி யயேவம் வேத) என்னும் மந்திரத்தை சொல்லிக்கொண்டு நீரை யேந்திக்கொண்டிருந்த கையினுல் தன்னை 3 - தடவை சுற்றி ஜலத்தை கீழே விடவேண்டும்.

சந்தியா தர்ப்பணம்.

స్మృత్యాచమనం కృత్వా, పునఃస్మృత్యాచమనంకృత్వా ప్రాణానాయమ్య పూర్వోక్త...ప్రీత్యర్థంసాయం సన్ధ్యాఙ్గతర్పణంకరిష్యే-సన్ధ్యాంతర్పయామి, సరస్వతీం తర్పయామి, వైష్ణవీంతర్పయామి, నిమృజీంతర్పయామి.

ప్రాతస్సన్ధ్యాఙ్గతర్పణంకరిష్యే - సన్ధ్యాంతర్పయామి, గాయత్రీంతర్పయామి, బ్రాహ్మీంతర్పయామి, నిమృజీం తర్పయామి.

మాధ్యాహ్నికసన్ధ్యాఙ్గతర్పణంకరిష్యే - సన్ధ్యాంతర్పయామి, సావిత్రీంతర్పయామి, రౌద్రీంతర్పయామి, నిమృజీంతర్పయామి.

ஸ்ம்ருத்யாசமனம் க்ருத்வா, புன: ஸ்ம்ருத்யாசமனம் க்ருத்வா பிராணுயம்ய பூர்வோக்த...ப்ரீத்யர்த்தம் ஸாயம் சந்தியாங்க தர்ப்பணம் கரிஷ்யே—சந்த்யாம் தர்ப்பயாமி, ஸரஸ்வதீம் தர்ப்பயாமி, வைஷ்ணவீம் தர்ப்பயாமி, நிம்ருஜீம் தர்ப்பயாமி.

ப்ராதஸ் ஸந்த்யாங்க தர்ப்பணம் கரிஷ்யே - ஸந்த்யாம் தர்ப்பயாமி, சாயத்ரீம் தர்ப்பயாமி, பிராஹ்மீம் தர்ப்பயாமி, நிம்ருஜீம் தர்ப்பயாமி.

மாத்தியாஹ்னிக ஸந்தியாங்க தர்ப்பணம் கரிஷ்யே - ஸந்த்யாம் தர்ப்பயாமி. ஸாவித்ரீம்தர்ப்பயாமி, ரௌத்ரீம்தர்ப்பயாமி, நிம்ருஜீம்சர்ப்பயாமி.

துஷ்ட கிருத்தியங்களைப் புரியும் பூதபிசாசுகளை பூமிக்கு பாரமாயும் பிராமணருக்கு விரோதமாயும் சூட்சும சரீரத்துடனே கடவுள் ஏன் படைத்தார்? ஊன் தேகத்தை உடையதாகஇராத இராட்சதர்களை வெறும்வாக்காகிய சந்தியாவந்தன மந்திரம் அவற்றை என்னசெய்யக்கூடும்? அத்தன்மையதான உருவத்தை ஒருவருங் கண்டதில்லையே. ஆகையால், சந்தியாவந்தனத்தை யேற்படுத்திய வியாசர் முதலியவர்களிடத்தில் அநேக மிருகங்களுக்கு விளங்கிய அறிவுங்கூடவிளங்கவில்லை.

உரோமம் விழுந்த அன்னத்தை உண்பதினுல் என்ன குற்றம்? போஜனத்திலிருக்கும் உரோமத்தை எடுத்துவிடுவதே போதுமான மந்திரமாயிருக்க, அதற்காக வேறே மந்திரம் ஜெபம் செய்வது எவ்வளவு அறிவீனம்.

குற்றமற்றவனே கடவுளை வணங்கவேண்டுமெனின், குற்றமுள்ளவன் சாயுச்சிய மடைவதெப்படி? வியாதி உள்ளவனுக்கல்லவோ அவிழ்தங் கொடுக்கவேண்டும், ஆகையால் சந்தியாவந்தனம் பயனற்ற கோட்பாடென்று நிராகரிக்கப்படுகின்றது. முதல்பாகம் முற்றிற்று. மற்ற உ - பாகங்களும் முறையே பிரசித்தப்படுத்தப்படும். இனி வருவது காயத்திரி &c.

(இன்னும்வரும்.)

M. M.

கடிதம்·

"நண்பர்களேகேட்டுக்கொள்ளுதல்."

வாரிதிசூழ் புவியின்கண் வசிக்கும் வித்வஜனர்களுக் கோர் திலகமாய்ப பிரகாசிக்கும் "தத்துவவிவேசினி" நங்காய—நான் கீழ்வரைநதுள்ளவற்றை யெமது நேசர்கட் கறிவித்தவர்பால் தக்க விடைபெற் றெமது கோரிக்கையை நிறைவேற்றுவாயென மனமுருங்கின்றனன்.—ம - ா - ா -ஸ்ரீ, கிருஷ்ணகிரி உண்மை விரும்பியவர்களும், ம - ா - ா - ஸ்ரீ, முத்துசாமி முனிவ ரவர்களும், ம - ா - ா - ஸ்ரீ, இராயப்பேட்டை நேசனவர்களும், ம - ா - ா - ஸ்ரீ, D. அவர்களும் ம-ா-ா-ஸ்ரீ, C. A. அவர்களும் ம-ா-ா-ஸ்ரீ, தி. பு. வையாபுரி பிள்ளையவர்களும் சென்ற வாண்டுமுதல் இதுகாறும் பத்திரிகையில் யாதாமொரு சங்கதியும் தீட்டி வராமலிருப்பதைக் குறித்து மிக்க விசனம் மேலிடுகின்றது. தங்கள் தங்களுக் கெத்தனைத் தொல்லை யிருந்தபோதிலு மதனை யோர்புற மிருத்தி, சில வைஷ்ணவமத, சில சிவமத, சில கிறிஸ்துமதகண்டனைக் கீர்த்தனைகளாகவும் சில கண்டன விருத்தங்களாகவும் சில கண்டனச்சீட்டுக் கவிகளாகவு மியற்றிப் பத்திரிகையின்வாயி

லாக வெளிப்படுத்த மிக்க மேளையாய் வந்தித்துக் கேட்டுக் கொள்ளுகின்றனன். கிற்ச, தத்துவவிவேசினி நங்காய், சென்றவருடம் தினது தந்தை "விடுகதைகளை" இனி பத்திரிகையில் இட்டோமென்று நினது அங்கத்தினோர் புறத்தில வரைந்தறிவித்தனர், இவ்வருடமாகிலும் எம்மைப்போன்ற விடுகதைப் பிரியர்களின் மனதைக் களிக்கச்செய்வாயென நினது விடைக்காக வெதிர்பார்த்திருக்கின்றனன். கிற்க; வருணபேத சுருக்கமியற்றிய நண்பரோ, தாங்கள் ஷை புத்தகந்தினிற்றட்டை மேற்புறத்தின் புத்தகவிளம்பரத்தில் ஷை புத்தகம் கோ-உமணமாநகர் - தி. சி. நாராயணசாமிபிள்ளை இடத்திலும் பெற்றுக்கொள்ளலாமெனத் தீட்டி யிதுகாறும் தாங்க ளெனக்கனுப்பாமலிருப்பசால் ஷை வருணபேத சுருக்கம் விலைக்குவேணுமென் ... சாவிய வொவ்வொருவருக்கும் ஷை புத்தக மென்னிட மில்லையென்றும் ஷை புத்தகத்தைப் பத்திரிகைவாயிலாக ... ன்றி புத்தகரூபமாக விதுகாறும் சண்டிலேனென்... ... நேரிடுகின்றது. ஷைபுத்தகத்தையான் 12—2—87 நாள் ... கிரி நேசரிடம் கண்ணுற்றதால் தமக் கறிவிக்க நேரிட்டது.

ஷை ஒவ்வொருவருடைய விடைக்காக வெதிர்பார்த்திருக்கின்றவனுகிய—தி. சி. நாராயணசாமி பிள்ளை.

இந்து சுவக்கியான சங்கத்தான்,
உமணமாநகர்—கோயமுத்தூர்.

வர்த்தமானசங்கிரகம்.

திருநெல்வேலியைச்சேர்ந்த தூத்துகொரின் பட்டணமான து கொஞ்சகாலந்தொடங்கி தீவிரமாய் முக்கியமான வியாபாரஸ்தலமாக விர்த்தியாகிவருகிறது. அது தென் இந்திய ரெயில்வேமுனை; அது கடற்றுறைப் பட்டணமாதலால் அங்கு அநேக நீராவிக்கப்பல்கள் போக்குவரவு செய்கின்றன. அதின் ஜன சங்கியை 1871௵த்தில் - 9000 - மாக இருந்து 1881௵த்திலே 16, 281-ஆ விர்த்தியாயிற்று, இப்போதைக்கு 22000-க்குக் குறைவுபடாது. முக்கியமாய் அவ்விடத்திய ஏற்றுமதிச்சரக்கு பஞ்சும், பனவெல்லமும். அந்த ரேவுதுறைவழியாய்ச் செல்லுஞ் சரக்கு மொத்தம் 146 லட்சம் ரூபாய்க்கு மேற்படுகிறது. இந்த ராச்சியத்திலே வர்த்தக விஷயத்தில் அது சென்னைக்கு இரண்டாவதாயிருக்கிறது; சில காலேஜுகளேற்பட்டுக் கல்வியும் விர்த்தியாகிவருகிறது. ஜூபிலி உற்சவமானது அன்று காலமே 31 வெடிதீர்ந்து, பிரார்த்தனை முதலிய சகலமும் வெகு சிறப்பாகவே நடந்தன.

சென்னை தென் கடலோரத்து பாண்டு வாத்தியஸ்தானத்திலேயில், சென்னைக் காலாள் 9-வது ரிஜிமெண்டு வாத்தியக்காரர்கள் இசமும் மார்ச்சிமீ ருவ சனிவாரந்தொடங்கி, பிரதி சனிவாரம்சாயங்காலம் ருஉ மணிக்குவாத்தியம்வாசிப்பார்கள்.

சென்னைக் காலாள் 10-வது ரிஜிமெண்டு இந்தமீ எவயிலும், 14-வது ரிஜிமெண்டு சOவ முதல் கசவக்குள்ளாகவும் ரங்கூனுக்குப்போகக் கப்பலேறும்.

சென்ற சுக்கிரவாரத்துக்கு முந்திய சுக்கிரவாரம் சாயங்காலம் ஈரோட்டிலிருந்து பெரம்பூர் ஸ்டேஷனுக்கு வண்டித்தொடர் வந்து சேர்ந்தபோது, அந்த வண்டிகளிலொன்றில் ஒரு சுதேச பயணக்காரி செத்துக்கிடக்கக்கண்டார்கள். அந்தப் பிரேதம் பிளாட்பாரத்தில் அலுவலின்பேரிலிருந்த ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் வசம் உடனே யொப்பிக்கப்பட்டது.

நவாப்முனிர் - உல் - முல்க் அவர்கள் (ஸர்ஸாலார்ஜங் அவர்களுடைய இளைய சகோதரர்) ஏப்ரில் அல்லது மே மாசத்தில் ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டு, டர்க்கி, ரஷியா, ஜெர்மெனி, பிரான்ஸ், இத்தேசங்களைப் பார்வையிட்டுக்கொண்டு, மகாராணியவர்களுடைய ஜூபிலி உற்சவகாலத்தில் அருகிருக்கும்படியாக ஜூன் மாசத்தில் முன்னதாகவே இங்கிலாந்து போய்ச்சேர்வார்கள்.

சென்னை ரெயில்வேமார்க்கமாய்ப் பயணம் போவதற்கு டிக்கெட்டுவாங்க ஜனங்கள் சென்றல் ஸ்டேஷனுக்கும் ராயபுரம் ஸ்டேஷனுக்கும் போகாமல், சமீபத்தில் வாங்கிக்கொள்ளும்படி, ரெயில்வே அதிகாரிகள் தங்கசாலைக் கடுத்த நீலதொட்டிக்குச் சமீபத்தில் ஒருஸ்டேஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மார்க்கத்திலுள்ள எல்லாஸ்டேஷன்களுக்கும் இங்கே டிக்கெட்டுகொடுக்கப்படும். ஆனால் இப்பொது ஏற்படுத்தியிருப்பது பரிட்சை செய்துபார்ப்பதற்குத்தான்.

பர்மா போலீசிற்கு வேண்டியிருக்கிற 2,000 சிபாய்கள் அவ்விடத்திலுள்ள ரிஜிமெண்டுகளிலிருந்து தங்களிஷ்டமாய் வருகிறவர்களைக்காணோம். இஷ்டமுள்ளவர்கள் வரலாமென்று இந்தியாவிலுள்ள சுதேச ராணுவ முழுமைக்கும் அறிவிப்பது நலம். பஞ்சாபிலும் பொம்பாயிலும் பர்மாவிற்காகச் சேர்க்கப்பட்ட போலீஸ் பட்டாளங்கள் கிட்டத்தட்ட பூர்த்தியாயின. வடமேற்கு மாகாணங்களில் சுத்தமாய்ச் சேகரமாகவில்லை.

ஜூபிலி உற்சவதினத்தில் விடுதலை செய்யப்பட்டவர்களில் இரண்டு பழய திருடர்கள் மறுநாளே திருட ஆரம்பித்து, ஒருவன் ஒரு கடையிலிருந்து ஒரு ரூபாய் அடித்துக்கொண்டுபோனதற்காகவும், மற்றொருவன் கொலுசுடனே கடியாரத்தைத் திருடிக்கொண்டுபோனதற்காகவும் குற்றவாளிகளானார்கள்.

காலஸ்திதி.

சென்ற (பிபர்வரி) 16வ வரையில் ஒருவாரத்துக் கணக்கின் குறிப்புகளாவன - சென்னைப் பிரதேசத்தில் 5 ஜில்லாக்களில் அற்பமழை பெய்தது. மற்ற ஜில்லாக்களில் மழை கிடையாது. பஞ்சாபில் மழையில்லை என்ற கூச்சல் அதிகம். சென்னைப் பிரதேசத்தில் மூன்று ஜில்லாக்களில் பயிர் க்ஷீணித்திருக்கிறது. மழை மெத்த அவசியமாயிருக்கிறது. மைசூர், குடகுபக்கந்தில விவசாய விஷயத்தில் க்ஷேமம் தான். வங்காளத்தில் நெல் பயிர் நாற்று நடவு முடிந்தது. புது உழவு ஆரம்பிக்கப்பட்டது. பர்மாவில் நெல் அறுவடை முடிந்து ஒப்படியாகின்றது. வங்காளம், நாகப்பூர் ஆயாம் பிரதேசங்களில் ஆலையாடுகிறார்கள். வங்காளத்திலும் ஆஸாமிலும் கடுகு சேகரப்படுகின்றது. அயோத்திப் பிரதேசத்தில் கசகசா விளைவு செவ்வையாயிருக்கிறது; வங்காளத்திலே கங்காநதியின் தென் குக்குடிகளில் சேதப்பட்டது; மாளவப் பிரதேசத்திலும் ரஜபுத்ர ஸ்தானத்திலும் பனியால சேதப்பட்டது. சுகவிர்த்தி பொதுவக நலம்.

விவசாயவிர்த்தி.

வங்காளத்தில் பிராமணர்கள்கூட எலும்பு எருவை உபயோகிக்கத் துணிந்தார்கள். இங்கிலீஷ் சீர்மை விதைகளைக் கொண்டும் முறைகளைக்கொண்டும் உருளைக்கிழங்கு முதலிய பதார்த்தப் பயிர் விர்த்திசெய்யப்படுகிறது. மோரீஸ் முறைப்படி கரும்பு பயிரிடப்படுகிறது. கலப்பைகள் சீர்மை முறைப்படி செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. முறை மாதிரித்தோட்டங்கள் வைக்கப்பட்டிருப்பதுமன்றி வெகுசாய் விநோதக் காட்சிச் சந்தைகளும் கூட்டப்படுகின்றன.

(இலலிதா.)

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி----என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை புரிவார்களென்று நம்புகிறோம.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலு முள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத் தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.